பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 01 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. எரிசக்தி துறையில் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டம், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

3. இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

>>>>>><<<<<<

நாட்டில் அதிகரித்து வரும் எரிசக்தி தேவை காரணமாக, இத்துறையில் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

*கோவாவில், இந்திய எரிசக்தி மாநாட்டை காணொலி மூலம் தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.*

*இந்திய - ஐரோப்பிய யூனியன் நாடுகளிடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.*

*இரண்டு பெரிய பொருளாதார நாடுகளிடையே ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், உலக அளவிலான வர்த்தகம் மற்றும் விநியோக நடைமுறைகளில் 3-ல் ஒரு பங்கு வர்த்தகத்திற்கு வகை செய்யும் என்று அவர் குறிப்பிட்டார்.*

*பெட்ரோலிய பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியா 5வது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.*

*மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், எரிசக்தி துறையின் எதிர்கால வளர்ச்சி, முதலீட்டுக்கான வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.*

*இம்மாநாட்டில் 120 நாடுகளைச் சேர்ந்த 75 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.*

*>>>>>><<<<<<<*

*பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் கண்டுபிடிப்புகள் பாதுகாப்பு படையினரின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், DRDO விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடிய அவர், ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் திறம்பட செயலாற்றியதாக தெரிவித்தார்.*

*பாதுகாப்பு ஆராய்ச்சியில் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு அரசு உயர் முன்னுரிமை அளிக்கும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.*

*முன்னதாக, ஐரோப்பிய யூனியன் வர்த்தக பிரதிநிதிகளுடன் அமைச்சர் பேச்சு நடத்தினார்.*

உலக அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் இந்தியா உறுதியுடன் செயலாற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் நிலவி வரும் சவாலான சூழலிலும், இருநாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய அம்சங்கள் குறித்தும், பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

இந்த ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்ற ஐரோப்பிய ஆணையத்தின் துணைத்தலைவர் திரு. *Kaja Kallas* தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டம், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் இன்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அவையை சுமுகமாக நடத்துவது தொடர்பாகவும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை விவாதிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

*இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு. ஜெ.பி. நட்டா, திரு. கிரண் ரிஜிஜு, திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால். இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*

*நாளை தொடங்கவுள்ள பட்ஜெட் கூட்டத் தொடரின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.*

*2026-2027ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட், வரும் ஒன்றாம் தேதி தாக்கல் செய்யப்படவுள்ளது.*

*இந்த பட்ஜெட் கூட்டத்தொடர், நாளை தொடங்கி, பிப்ரவரி 13ஆம் தேதி வரையும், மார்ச் 9ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2ஆம் தேதி வரையும் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.*

*>>>>>><<<<<<*

*இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்தை தற்போது நடைபெற்று வருகிறது.*

*புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்த பேச்சுவார்த்தையில் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திரு.*

*Antonio Costa,* ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி. *Ursula Von Der Leyen* ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஜவுளி, உரம், மின்சாதனங்கள், காலணி மற்றும் தோல் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சர்வதேச அளவில் இந்த ஒப்பந்தம் அனைவராலும் உற்றுநோக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி கடந்த பத்தாண்டுகளில் 34 மடங்கு அதிகரித்துள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் கூறினார்.

சிவில் விமான போக்குவரத்து துறை, முன்னெப்போதும் இல்லாத வகையில், விரைவான வளர்ச்சியை கண்டுவருவதாகவும், சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

உத்ராகண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்பட்டு, இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சட்டம் சமத்துவம், பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

இதன் மூலம் திருமணம், விவாகரத்து நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இது சமூகம் மற்றும் நீதித்துறை செயல்பாடுகளை எளிதாக்குவதுடன், சாமானிய மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும்.

இதனிடையே, பொது சிவில் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள். உடனடியாக அமலுக்கு வரும் வகையில், அம்மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

>>>>>><<<<<<<

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

உலக அளவில் நிலவிவரும் சவாலான சூழல்களுக்கு தீர்வு காண்பதில் ஐ.நா போன்ற சர்வதேச அமைப்புகளின் செயல்பாடுகள், முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு. குட்ரஸ் தெரிவித்தார்.

ஐ.நா-வில் சர்வதேச சட்ட விதிகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று பேசிய ஐ.நாவிற்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. P. Harish, இந்த விதிகளை திறம்பட செயல்படுத்தும் வகையில், பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கு சுமுக தீர்வு காணும் வகையிலான ஐ.நா.வின் முயற்சிகளுக்கு, உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று திரு. *Harish* வலியுறத்தினார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலம், நஸீராபாத் உள்ள கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை *8* ஆக அதிகரித்துள்ளது.

மீட்பு நடவடிக்கைகளில் தீயணைப்பு படையினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

நாகாலாந்து மாநிலம், கோஹிமாவில் நாட்டின் முதலாவது ட்ரோன் பயிற்சிப் பள்ளி மற்றும் சீர்மிகு மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி மையத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. *Neiphiu Rio* தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், தொழில்நுட்பம் சார்ந்த நிர்வாகி நடைமுறைகள் மற்றும் பொதுச் சேவைகளை மேம்படுத்துவதில் நவீன தொழில்நுட்பம் இன்றியமையாதது என்று திரு. *Neiphiu Rio* தெரிவித்தார்.

அதிநவீன ட்ரோன் தொழில்நுட்பத்தில் இளைஞர்களின் திறனை மேம்படுத்துதற்கும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கும் இத்தகைய நடவடிக்கைகள் உதவிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தென்கொரியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி, 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சமூகவலைளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வாகனங்கள், மருந்து பொருட்கள் உள்ளிட்டவைகளுக்கு இந்த உயர்த்தப்பட்ட வரி பொருந்தும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

இன்னும் சற்றுநேரத்தில் Bulawayo-வில் இப்போட்டி தொடங்குகிறது.

>>>>>><<<<<<

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Asmita Chaliha காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***பாங்காக்கில் இன்று தொடங்கிய இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 15-21, 21-12, 21-12 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Hung Yi Ting-யை வென்றார்.***

*>>>>>><<<<<<*

***மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.***

***வரோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.***

*>>>>>><<<<<<*